# வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

## 2019–ம் ஆண்டு மார்ச் மாதம் 08–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்

## தீர்மானம் நகல்கள்

**தீர்மானம் எண் : 77 / 2019, நாள் : 08.03.2019**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986) –ல் பிரிவு 3,6 மற்றும் 25–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306–ன் படி 2019–ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை , உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனைக்கு எடுத்துச்செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

1) **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.
2) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.
3) **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.
4) **தண்டணை விதிக்கும் முறைகள்:** மேற்படி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்.

**2) வர்த்தக நிறுவனங்களின் வகைபாடு :** மொத்த சேமிப்பாளர்/ விநியோகிப்பாளர்

a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
e) 2000–ம் அதற்கு மேல்

**3) வணிகவளாகங்கள்**

a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்
b) பல்பொருள் அங்காடிகள்
c) திரையரங்குகள்
d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்
e) கல்வி நிறுவன வளாகங்கள்
f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுபணித்துறை நிறுவனங்களின் வளாகங்கள்
g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை
h) பெரிய , நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்

4) மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனை கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் முதலானவைகள்.
5) சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைக்காரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்
6) இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம் , இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றிக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.
7) துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர் அட்டவணை –II –ல் குறிப்பிட்டுள்ளபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை / அல்லது குடோனை பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 /பொது சுகாரதார சட்டம் 1939–ன் படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.
8) **மேல் முறையீட்டுக்கு உரிமை**

வெள்ளகோவில் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் வெள்ளகோவில் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

**II தண்டனை விபரம்**

பிரிவு **306 (28–A)** இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத் திற்க்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத் திற்க்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத் திற்க்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி எறியப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஐந்தாயிரம் ரூபாய் | பத்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 2 | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் | இருப்பத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல். | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஐநூறு ரூபாய் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் |

(ந.க.எண். 819/2017/எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 78 / 2019, நாள் : 08.03.2019</u>**

அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள். 03.07.2007ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள கடைகள் மூன்று ஆண்டுகளை கொண்ட ஒரு தொகுப்பு கால அளவில் ஒன்பது ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு அரசாணையினை படி அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேலும் ஒன்பது ஆண்டுகள் குத்தகை காலத்தினை நீட்டிப்பு செய்து கொள்ளலாம் எனவும், அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட குத்தகை தொகைக்கு கடை குத்தகை உரிமதாரர்கள் ஒப்புக் கொள்ளவில்லை எனில் கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு பொது ஏலத்தில் விடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்கண்ட இரண்டு கடைதாரர்கள் தங்களுக்கு மறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை அதிகமாக உள்ளதாகவும், மேற்கண்ட உயர்வு செய்யப்பட்ட தொகையினை செலுத்த இயலாது என தெரிவித்து கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளனர். மேலும் மேற்கண்ட கடைகளுக்கு 2017–2018ம் ஆண்டு வரை கடை வாடகையினை நிலுவையின்றி செலுத்தியுள்ளனர். மேற்கண்ட கடைதாரர்கள் பின்வருமாறு டெபாசிட் தொகை செலுத்தியுள்ளனர்.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் விபரம் | Deposit A/C கணக்கு எண். 3402001-ல் உள்ள தொகை |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடை எண். 4 | டி. சிவக்குமார் | 21338 |
| 2 | தீத்தாம்பாளையம் கடை எண். 3 | எம். குணசேகரன் | 2000 |

மேற்கண்ட கடைதாரர்கள் செலுத்திய தொகை காலங்கடந்த வைப்பு நிதி பதிவேட்டில் வரவு வைக்கப்பட்டுள்ளதால் இத்தொகையினை கடைதாரர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 79 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **08.03.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சொரியங்கிணத்துப் பாளையம் காலணியில் தார்சாலை புதுப்பித்தல் | 10,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.96 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 8.76 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீராகன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 80 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **08.03.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சொரியங்கிணத்துப் பாளையம் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் | 10,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.96 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 8.76 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீராகன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 81 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **08.03.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வள்ளியரச்சல் ரோடு பகுதியில் தார்சாலை சீரமைத்தல் | 10,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.94 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.84 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீராகன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 82 / 2019, நாள் : 08.03.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்திராநகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | 40,000 | ஆர். சிங்காரம், எல்.கே.சி.நகர் | 6.51 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 7.10 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

இதில் குறைவான ஒப்பந்த விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தர கோரியதில் கீழ்காணும் விபரப்படி விலைகுறைப்பு செய்து தர சம்மத கடிதம் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஏற்கனவே கோரிய ஒப்பந்த விகிதம் | தற்பொழுது விலைகுறைப்பு செய்த ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| ஆர். சிங்காரம் | 6.51 % மதிப்பீட்டைவிட அதிகமாக | 4.94 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

மேற்படி ஒப்பந்ததாரரின் விலைகுறைப்பு ஒப்பந்த விகிதத்தை அங்கீகாரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த ஆர். சிங்காரம், எல்.கே.சி.நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 83 / 2019, நாள் : 08.03.2019**

நகர்மன்றத் தீர்மானம் எண். 49/2019, நாள். 15.02.2019 அனுமதியின்பேரில் பொது சுகாதார வாகனம் எண். TN 42 V 7094 வண்டியின் தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனம் பழுது நீக்கம் செய்ய 07.03.2019–ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை ஒப்புநோக்குப் பட்டியலுடன் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | காந்திமோட்டார்ஸ், ஈரோடு | ரூ. 1,30,480 /– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் | ரூ. 1,32,552 /– |

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள காந்திமோட்டார்ஸ், ஈரோடு அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள காந்திமோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க வழங்கலாம்.

(கோப்பு எண். 2047 / 2018 / ஹெச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 84 / 2019, நாள் : 08.03.2019</u>**

நகர்மன்றத் தீர்மானம் எண். 48/2019, நாள். 15.02.2019 அனுமதியின்பேரில் பொது சுகாதார வாகனம் எண். TN 33 AZ 7538 மினி டிப்பர் லாரிக்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனம் பழுது நீக்கம் செய்ய 07.03.2019–ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை ஒப்புநோக்குப் பட்டியலுடன் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | காந்திமோட்டார்ஸ், ஈரோடு | ரூ. 1,35,128 /– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் | ரூ. 1,37,536 /– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள காந்திமோட்டார்ஸ், ஈரோடு அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள காந்திமோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க வழங்கலாம்.

(கோப்பு எண். 141 / 2019 / ஹெச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 85 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனம் வண்டி எண். TN 33 AZ 7538 -க்கு புதிய பேட்டரி வாங்கி பொருத்த உத்தேச செலவினம் ரூ. 5500 /–க்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தீர்மானம் எண். 55 / 2019, நாள். 15.02.2019. மேற்கண்ட வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கி பொருத்த உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தோர் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நந்தா ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், வெள்ளகோவில் | 5500 |
| 2 | முத்து ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், வெள்ளகோவில் | 5700 |
| 3 | அன்னை ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், வெள்ளகோவில் | 5900 |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தெரிவித்துள்ள நந்தா ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், வெள்ளகோவில் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி தெரிவித்துள்ள நந்தா எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், வெள்ளகோவில் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கலம்.

(கோப்பு எண். 139 / 2019 / ஹெச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 86 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சி அலுவலகப்பணியின் காரணமாக பணியாளர்கள் வெளியூர் சென்று வந்தமைக்கு பயணப்பட்டியல் தொகை வழங்க 2019–2020–ம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ. 3,00,000 /–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி செலவினத்தை பொது நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 02 / 2019 / சி1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 87 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அருள்மிகு வீரக்குமார் சுவாமி மாசிமகாசிவராத்திரி திருவிழா எதிர்வரும் 05.03.2019 ம் தேதி முதல் 07.03.2019 ம் தேதி முடிய

நடைபெறுவதால் அதற்கான பொது சுகாதார முன்னேற்பாடுகளை செய்யக்கோரி மேற்படி கோவில் செயல் அலுவலர் அவர்களின் கடிதம் நாள் : **08.02.2019** ம் தேதி கேட்டுக்கொண்டதன்படி, நகராட்சி நிர்வாகம் மூலம் பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவுப்பட்டியல் ரூ.**48725/–** ஆகும். மேற்படி தொகை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை **1939** ஆம் ஆண்டு பொதுசுகாதார சட்டப்பிரிகளின்படி மேற்படி செலவின தொகையினை கோவில் நிர்வாகத்திடம் மீளம்பெறவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் (கோப்பு எண் 119/2019/எச்1

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 88 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சி பொதுப்பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் மூன்று கணினி இயக்குநர் சப்ளை செய்ய 28.02.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியலுடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **தொகை ஒரு நபருக்கு ஊதியம் ஆயுள் காப்பீடு மற்றும் EPF13.61% உட்பட** | |
|---|---|---|---|
| 1 | M. தங்கவேலு, மெயின்ரோடு, கொரியாம்பட்டி, | 630/- | ஆறுநூற்றி முப்பது மட்டும். |
| 2 | துரை அன் கோ, வேலாயுத நகர், ஜெயங்கொண்டம், | 627/- | ஆறுநூற்றி இருபத்தி ஏழு மட்டும் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள திரு. துரை அன் கோ அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 631 / 2018 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 89 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் 4 கனரக வாகனங்கள் இயக்குதல் பணிக்கு கனரக வாகன ஓட்டுநர்கள் 4 நபர்கள் சப்ளை செய்ய **28.02.2019–**ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்குப் பட்டியலுடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **தொகை ஒரு நபருக்கு ஊதியம் ஆயுள் காப்பீடு மற்றும் EPF13.61% உட்பட** | |
|---|---|---|---|
| 1 | M/s. துரைஅன்கோ, ஜெயங்கொண்டம் | 627 /- | ரூபாய் ஆறுநூற்றி இருபத்தி எழு மட்டும் |
| 2 | M. தங்கவேலு, கொரியாம்பாட்டி, அரியலூர் | 630 /- | ரூபாய் ஆறுநூற்று முப்பது மட்டும் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ள M/s. துரைஅன்கோ, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 607 / 2018 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 90 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சி குப்பைக் கிடங்கில் Bio Mining செய்யும் பணிக்கு (Legacy waste dumped Approximately 8752 cum) மூன்றாம் நபர் ஆய்வு CES-Project Management

Consultancy–க்கு ரூ. 3,00,000 /– GST 18 % ரூ. 54,000 /–ம் சேர்த்து ரூ. 3,54,000 /–ம் செலுத்த கடிதம் 22.02.2019 –ல் Centre for Environmental Studies, Anna university, Chennai Director கடிதம் CES / DR / Vellakovil Municipality / 2018-19 மூலம் கிடைக்கபெற்றுள்ளது. மேற்படி தொகையினை Anna University-க்கு வங்கி வரைவோலையாக செலுத்த அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 208 / 2018 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 91 / 2019, நாள் : 08.03.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கரட்டுப்பாளையம் கழிப்பிடத்தில் குடிநீர் மின்மோட்டார் பொருத்தி வசதிகள் செய்தல் | 1.90 இலட்சம் | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 6.85 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 7.39 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

இதில் குறைவான ஒப்பந்த விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தர கோரியதில் கீழ்காணும் விபரப்படி விலைகுறைப்பு செய்து தர சம்மத கடிதம் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஏற்கனவே கோரிய ஒப்பந்த விகிதம் | தற்பொழுது விலைகுறைப்பு செய்த ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| வீரா கன்ஸ்ட்ரக்சன் | 6.85 % மதிப்பீட்டைவிட அதிகமாக | 4.92 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

மேற்படி ஒப்பந்ததாரரின் விலைகுறைப்பு ஒப்பந்த விகிதத்தை அங்கீகாரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த ஆர். சிங்காரம், எல்.கே.சி.நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 92 / 2019, நாள் : 08.03.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | காமராஜபுரம், சீரங்கராயகவுண்டன்வலசு பகுதியில் வடிகால் அமைத்தல் மற்றும் அண்ணாநகர் பகுதியில் சீரமைத்தல் | 9,60,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 6.46 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 7.17 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

இதில் குறைவான ஒப்பந்த விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தர கோரியதில் கீழ்காணும் விபரப்படி விலைகுறைப்பு செய்து தர சம்மத கடிதம் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஏற்கனவே கோரிய ஒப்பந்த விகிதம் | தற்பொழுது விலைகுறைப்பு செய்த ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| வீரா கன்ஸ்ட்ரக்சன் | 6.46 % மதிப்பீட்டைவிட அதிகமாக | 4.62 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

மேற்படி ஒப்பந்ததாரரின் விலைகுறைப்பு ஒப்பந்த விகிதத்தை அங்கீகாரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த ஆர். சிங்காரம், எல்.கே.சி.நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 93 / 2019, நாள் : 08.03.2019**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதார பிரிவில் வீடு வீடாகச் சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பணிக்கு 56 தற்காலிக DBC பணியாளர்களை கொண்டு டெங்கு காய்ச்சல் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்ற தீர்மானம் 262/2018 நாள். 31.12.2018 அனுமதிக்கப்பட்டதில் அனுமதி காலம் 31.03.2019ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

நகராட்சி நிர்வாகம் ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 1588 / ஜே1 / 2015 நாள் 16.10.2015 மற்றும் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 509 / அ2 / 2010 நாள். 07.10.2015ல் நகராட்சி பகுதிகளில் வீடுவீடாகச் சென்று டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள தற்காலிகப் பணியாளர்களை நியமனம் செய்யவும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் கண்ட நபர் மருத்துவ மணையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அல்லது டெங்கு காய்ச்சல் என தெரிந்தால் உடனே அப்பகுதியில் அதிகமான DBC பணியாளர்களை நியமித்து 300 வீடுகளுக்கு இரண்டு களப்பணியாளர்களை நியமனம் செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 16828 வீடுகள் உள்ளதால் 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் என்ற அடிப்படையில் 16828 வீடுகளுக்கு 56 தற்காலிக DBC களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தலாம்.

எனவே 01.04.2019 முதல் 31.06.2019 வரையிலான காலத்திற்கு 56 தற்காலிகக் களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 12,00,000/- ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 862 / 2015 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 94 / 2019, நாள் : 08.03.2019**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019னை, அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA1) நாள் 04.02.2019 தேதியன்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ், அரசிதழ் எண்.43, நாள்.04.02.2019தேதியன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் –2019னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தின் சுற்றறிக்கை (ந.க.எண் 50977/2018/டிபி3, நாள்.07.03.2019 ) ன்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் தெரிவித்துள்ளபடி 01.04.2019 முதல் தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்தல் (Professional Developers) குறித்த நடைமுறை விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின் படியும் மேலும் Screening Committee அமைத்து சான்று பெற்ற நபர்களை மட்டுமே பதிவு

செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஆணையாளர்,நகரமைப்பு அலுவலர் / பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர், ஆகியோரைக்கொண்டு Screening Committee அமைத்திடவும் பெறப்படும் மனுக்களை சரிபார்ப்பு செய்து உரிய உத்திரவு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்
2) மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண் 221/2019/எப்1)

**தீர்மானம் – பதிவு செய்யப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 95 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் வண்டி எண். TN 42 AZ 7094 வண்டிக்கு பின்புற டயர்கள் 2 எண்ணிக்கை புதியதாக வாங்கி பொருத்த உத்தேச செலவினம் ரூ. 17,000 /–க்கு மன்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (மன்ற தீர்மான எண். 51 / 2019, நாள். 15.02.2019) மேற்படி வாகனங்களுக்கு புதிய டயர்கள் வாங்க 22.02.2019-ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்

| டயர் கம்பெனி பெயர் | டயர் அளவு | ஒரு டயரின் விலை | தேவையான டயர்களின் எண்ணிக்கை | மொத்த டயர்களின் விலை ரூபாய். |
|---|---|---|---|---|
| ஸ்ரீ மாருதி டயர்ஸ், வெள்ளகோவில் | 7.50X16 707 MRF | 8,500 | 2 Nos | 17,000 |
| ஸ்ரீ சக்தி விநாயகா டயர்ஸ், கோவை ரோடு, அவினாசி | 7.50X16 707 MRF | 8,350 | 2 Nos | 16,700 |
| ஸ்ரீ காடேஸ்வரா டயர்ஸ், சேரன் நகர், வெள்ளகோவில் | 7.50X16 707 MRF | 8,200 | 2 Nos | 16,400 |

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி தெரிவித்துள்ள ஸ்ரீகாடேஸ்வரா டயர்ஸ், வெள்ளகோவில் என்பவருக்கு விநியோக உத்திரவு வழங்கலாம்.

(கோப்பு எண். 2047 / 2018 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 96 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள **08.03.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய் பழுது பார்த்தல் | 10,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.46 % குறைவாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 2.90 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 97 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 08.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய் பழுது பார்த்தல் | 10,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.36 % குறைவாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 3.30 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 98 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 08.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் உள்ள மின்மோட்டார் பழுது பார்த்தல் | 10,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.08 % குறைவாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 2.51 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 99 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 08.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் உள்ள மின்மோட்டார் பழுது பார்த்தல் | 10,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.10 % குறைவாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 2.30 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், வெள்ளகோவில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 100 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான எரிவாயு தகனமேடை கணபதிபாளையம் சாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எரிவாயு தகனமேடை நகராட்சி மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்கான வேலையாட்கள், விறகுகள் விநியோகம் செய்தல், உபகரணங்களில் ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்தல் ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பராமரிப்பு பணியினை 2019–20–ம் ஆண்டிற்கு மேற்கொள்ள ரூ. 10,00,000 /–க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 101 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சி பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் பொதுகிணறுகள் 305 சிறுமின்விசைப்பம்புகள் பொருத்தப்பட்டு பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த சிறுமின்விசைப்பம்புகளை கண்காணித்து இயக்கும் பணிக்கு இரண்டு மோட்டார் இயக்குநர்கள் (without category) ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தங்களில் 31.03.2019–ல் முடிவடைகிறது. எனவே 2019–20–ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் குடிநீர் விநியோகப்பணிக்கு இரண்டாவது காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதால், ஏற்கனவே உள்ள பணியாளர்கள் போதுமானதாக இல்லை என்பதால் கூடுதலாக மூன்று டர்ன்கார்க் மற்றும் ஓட்டுநர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தகாலம் 31.03.2019–ல் முடிவடைகிறது. எனவே இப்பணிகளை 2019–20–ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இரண்டு மோட்டார் இயக்குநர்கள், மூன்று குழாய் திறப்பாளர்கள் (turn cock) மற்றும் ஈப்பு ஓட்டுநர் ஒருவர் ஆகிய பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவும் இதற்க்கான உத்தேச மதிப்பீடு ரூ. 8,00,000 /–க்கும் மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 102 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சி பகுதிகளில் காற்றழுத்த மின்மோட்டாக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மாதம் ஒருமுறை Oil servicing செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–ம் ஆகும். பொதுமக்கள் நலன் கருதியும் குடிநீர் அவசர அவசியம் கருதியும் 31.03.2020 வரை இப்பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். /2019/இ1)

**தீர்மானம் – கீழே அனுமதிக்கப்பட்டது, எனவே நிராகரிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 103 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் புதியதாக அமைக்கப்பட உள்ள குழாய்களுக்கான குழாய்களை அமைக்க நெடுஞ்சாலைத் துறைக்கு மதிப்பீட்டுத் தொகை மற்றும் சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.மேற்படி தொகையினை நெடுஞ்சாலைத் துறைக்கு செலுத்த அனுமதிக்கும், அதற்கான தொகை ரூ. 2,00,000 /—க்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 975 /2018/இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 104 / 2019, நாள் : 08.03.2019</u>**

இந்நகராட்சி பகுதிகளில் 305 இடங்களில் சிறுமின்விசைப்பம்பு திட்டங்கள் மூலம் பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதில் காற்றழுத்த மின்மோட்டார்கள் 255 உள்ளது. இந்த மின்மோட்டார்கள் பராமரிப்பு பணியில் கம்பிரசர் ஆயில் மாற்றுவது மிகவும் முக்கியமானது. இந்த பராமரிப்பு பணியை பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் அவசர அவசியம் கருதியும் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியை ஒப்பந்த அடிப்படையில் 2019—20—ம் ஆண்டிற்கு மேற்கொள்ளவும் (கம்பிரசர் ஆயில் மட்டும் விநியோகம் செய்யும் பணி), இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 10,00,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 105 / 2019, நாள் : 08.03.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகரமைப்பு பிரிவு பணியை சார்ந்த கட்டிட உரிமக் கட்டணங்கள், மனை ஒப்புதல் மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றை நகராட்சி நிதிநிலைமையை கருத்தில் கொண்டும், அதிகரித்து வரும் செலவினங்களை கருத்தில் கொண்டும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 05.03.2019—ந் தேதிய ந.க.எண். 31159 / 2018 / டிபி3—ன் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019—ன்படி விதி 14—ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் எனவும் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் மூன்றாண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையிலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920—ன்படியும் கீழ்கண்டவாறு கட்டண விகிதங்கள் மாற்றி அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>திருத்தப்பட்ட கட்டண அட்டவணை</u>

| வ. எண் | 1920;ம் வருடத்திய த.மா.ந. சட்டம் பிரிவின் கீழ் | உரிமையாணை தொகை விதிக்கப்பட வேண்டிய விபரம் | புதிதாக மற்றும் திருத்தப்பட்ட கட்டண விகிதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | அளவு | காலம் | விகிதம் ரூபாய் |
| 1 | 175,176 மற்றும் 177 | அ) காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற | 1 ஏக்கர் வரை | 1 ஏக்கருக்கு மற்றும் 1 ஏக்கருக்கு மேல் ஒவ்வொரு ஏக்கருக்கும் (ஒரு தடவை மட்டும்) | 10000 |
| | | ஆ) மனை உட்பிரிவு கட்டணம் | 1 சதுர மீட்டருக்கு | ஒரு தடவை மட்டும் | 5 |
| 2 | 187 மற்றும் 188 | தெரு ஓரங்களில் கட்டிட சாமான்கள் சேகரித்து வைத்தல் | | ஒரு தடவை மட்டும் | கட்டிட உரிமக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | கட்டணத்தில் 50 சதவீதம் செலுத்த வேண்டும் |
| 3 | 181 | நகராட்சி தெருப்பகுதியில் நீட்டப்படும் வராந்தா, பால்கனி, வேனல், தட்டி, ஆர்.சி.சி , சன்சேடு போன்ற ஆட்சேபனையில்லாத ஆக்கிரமிப்புகள் | | | |
| | | அ) குடியிருப்பு உபயோகத்திற்கு | 2 சதுர மீட்டர்கள் மற்றும் அதன் பாகத்திற்கு | நிதியாண்டு 1–க்கு அல்லது அதன் பகுதிக்கு | 50 |
| | | ஆ) குடியிருப்பில்லாத வணிக மற்றும் பிற காரியங்களுக்கு | 2 சதுர மீட்டர்கள் மற்றும் அதன் பாகத்திற்கு | நிதியாண்டு 1–க்கு அல்லது அதன் பகுதிக்கு | 75 |
| 4 | 183 | 2. அ) கீத்து தட்டியினால் தற்காலிகமாக நிழல் தட்டி பலரக, ஏணிப்படி முதலியவை அமைக்க | 2 சதுர மீட்டர்கள் மற்றும் அதன் பாகத்திற்கு | 1 வருடம் | 30 |
| | | ஆ) குடியிருப்பு உபயோகத்திற்கு குடியிருப்பு இல்லாத பிற உபயோகத்திற்கு | 2 சதுர மீட்டர்கள் மற்றும் அதன் பாகத்திற்கு | 1 வருடம் | 50 |
| | | இ) கல்யான பந்தல் மற்றும் தற்காலிக கீத்த் கொட்டகை அமைக்க | 2 சதுர மீட்டர்கள் மற்றும் அதன் பாகத்திற்கு | 7 நாட்கள் | 10 |
| | | ஏ) மத சம்பந்தமாக போடப்படும் பந்தல்களுக்கு | இலவசஅனுமதி | | |
| | மனை அங்கீகரிக்க குடியிருப்பு | | | | |
| 5 | 197 | அ) 1. குடிசை நீங்கலாக வீடு கட்ட மனை அங்கீகரிக்க | 100 சதுர மீட்டர் வரை | 1 தடவை மட்டும் | 400 |
| | | 2. மேற்படி 100 சதுர மீட்டர் முதல் | 500 ச.மீ மீட்டர் வரை | 1 தடவை மட்டும் | 1000 |
| | | 3. மேற்படி 500 சதுர மீட்டருக்கு மேல் | 500 ச.மீ மீட்டருக்கு மேல் | 1 தடவை மட்டும் | 2000 |
| | | ஆ) 1) குடியிருப்பில்லாத கட்டிடங்கள் கட்ட மனை அங்கீகாரம் | 100 சதுர மீட்டர் வரை | 1 தடவை மட்டும் | 1000 |
| | | 2) மேற்படி 100 சதுர மீட்டர்முதல் 500 சதுர மீட்டர் வரை | | 1 தடவை மட்டும் | 2000 |
| | | 3) 500 சதுர மீட்டருக்கு மேல் | | 1 தடவை மட்டும் | 4000 |
| | குறிப்பு | அனுமதி புதுப்பிக்க (அ) மற்றும் (ஆ) கண்டுள்ள கட்டணமும் இல்லை. | | | |
| 6 | 208 | 1, குடிசை புதிதாகவோ, கூடுதலாகவோ, கூரையை மாற்றி அமைக்கவோ கட்டும் கட்டுமானங்களுக்கு | 1 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 1 தடவை மட்டும் | 200 |
| 7 | 197 மற்றும் 215 | குடிசை நீங்கலாக புது கட்டிடம் மாறுதல் செய்து கட்டுதல் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி | | | |
| | | அ) குடியிருப்பு உபயோகத்திற்காக ஆர்.சி.சி கட்டிடம் கட்டுவதற்காக | | | |
| | | 1. தரை தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2. தரைகீழ் தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 500 |
| | | 3. முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டத்திற்கு அதற்கு மேல் கட்டப்படும் தளத்திற்கும் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 700 |
| | | ஆ) குடியிருப்பில்லாத உபயோகத்திற்காக ஆர்.சி.சி கட்டிடம் கட்டுவதற்காக | | | |
| | | 1. தரை தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 800 |
| | | 2. தரைகீழ் தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 800 |
| | | 3. முதல் தளம் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 1000 |
| | | 4. இரண்டாவது தளம் மற்றும் அதன் மேல் கட்டப்படும் ஒவ்வொன்றிற்க்கும் | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 1200 |
| | | இ) ஓடு, சிமெண்ட் ஓடு தகரம் கூரை கட்டிடம் 1 முதல் மற்றும் அதற்கு மேல் தளங்களுக்கும் | | | |
| | | 1. குடியிருப்பு கட்டிடங்களுக்கு | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 420 |
| | | 2. குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 5 வருடம் | 600 |
| | | ஈ) சுற்றுச்சுவர் | | | |
| | | 1. 1.50 மீட்டர் உயரத்திற்கு மேற்படாத சுற்றுசுவர் | 10 மீ நீளத்திற்கு | 5 வருடம் | 260 |
| | | பிரதான கட்டிடத்தில் இல்லாமல் தனியாக | | | |
| | | உ) குளியல் அறை, மல அறை கட்டுவதற்கு | | | |
| | | 1. குளியல் அறை கட்ட | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 600 |
| | | 2. கழிப்பறை | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 600 |
| | | 3. குளியல்/ கழிப்பறை கட்ட | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 1000 |
| | | 4. செப்டிக் டேங்க் | ஒவ்வொன்றிக்கும் | 5 வருடம் | 500 |
| | | 5. ஆழ்துளை கிணறு அமைக்க | | ஒரு தடவை மட்டும் | 1000 |
| | | ஊ) அனுமதியற்ற கட்டுமானத்திற்கு | கட்டிட உரிம கட்டணத்திலிருந்து 100 சதவீதம் கட்டணம் கூடுதலாக வசூல் செய்யப்பட வேண்டும் | | |
| | | <u>குறிப்பு</u><br>திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் சமா்ப்பிக்கும்பட்சத்தில் அனுமதி அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடம் கட்டப்பட்டு வந்தாலோ அல்லது கட்டிடப்பணி ஆரம்பிக்கப்படாமல் இருந்தாலோ மேற்கண்ட கட்டிட அனுமதிக்கான கட்டணத்தில் 75 சதவீதம் செலுத்தினால் ஒருமுறை மட்டும் மூன்றாண்டு காலத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி புதுப்பித்துக் கொள்ள அனுமதிக்கப்படும். | | | |
| 8 | 217 | தனிப்பட்டோர் நிலங்களில் கண்காட்சி, சர்க்கஸ் இதுபோன்ற காரியங்களுக்கு தற்காலிக கீற்றுக் கொட்டகை போட | 10 சதுர மீட்டர் அதன் பாகத்திற்கு | 1 நாள் | 200 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1. | நகர வரைபடம் வழங்க (வரைபடம் முழுவதும்) | ஒன்றுக்கு | | 500 |
| | 2. | அனுமதிக்கப்பட்ட வரைபடம் உண்மை நகல் வழங்க | ஒன்றுக்கு | | 200 |
| | 3. | அத்துமால் காட்ட | ஒரு பக்கத்திற்கு | | 100 |
| | 4. | புல வரைபடம் நகல் வழங்க | புல எண் ஒன்றுக்கு | | 200 |
| | 5. | இடிக்கப்பட்ட கட்டிடங்களில் கட்டுமான கழிவு பொருட்களை அகற்ற | லாரி லோடு ஒன்றுக்கு | | 1000 |
| | 6. | கட்டிட வடிவமைப்பாளர்கள் (Architects), பொறியாளர்கள் (Engineers), கட்டமைப்புப் பொறியாளர்கள் (Structural Engineers), கட்டிட அபிவிருத்தியாளர்கள் (Construction Engineers), தரத்தணிக்கையாளர் (Quality Auditors), நகரமைப்பு வல்லுநர் (Town planners) மற்றும் அபிவிருத்தியாளர் (Developers) பதிவு செய்தல் | பதிவுக் கட்டணம் | 1 தடவை மட்டும் | 5000 |
| | 7. | கட்டிட வடிவமைப்பாளர்கள் (Architects), பொறியாளர்கள் (Engineers), கட்டமைப்புப் பொறியாளர்கள் (Structural Engineers), கட்டிட அபிவிருத்தியாளர்கள் (Construction Engineers), தரத்தணிக்கையாளர் (Quality Auditors), நகரமைப்பு வல்லுநர் (Town planners) மற்றும் அபிவிருத்தியாளர் (Developers) அனுமதியினை புதுப்பித்தல் | புதுப்பித்தல் கட்டணம் | 5 வருடத்திற்கு | 5000 |
| | | **கூர்ந்தாய்வுக் கட்டணம்**<br>அ. கட்டிட விண்ணப்பத்திற்கு | கூர்ந்தாய்வுக் கட்டணம் / பதிவுக் கட்டணம் | ஒரு தடவை மட்டும் | 500 |
| | | ஆ. மனை ஒப்புதல், மனை உட்பரிவு, மனை ஒருங்கிணைப்பு | அனுமதி கட்டணம் | ஒரு தடவை மட்டும் | 2000 |
| | | இ. கட்டிட முடிவு குறித்த சான்றிதழ் வழங்க | | ஒரு தடவை மட்டும் | 500 |
| | 215 A | மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதற்கான வைப்புத் தொகை | கட்டிடப் பரப்பு 1000 சதுர அடி அமைக்க | ஒரு தடவை மட்டும் | 2000 |
| | | | கட்டிடப் பரப்பு 1000 ம் சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை | ஒரு தடவை மட்டும் | 4000 |
| | | | கட்டிடப் பரப்பு 2000 சதுர அடிக்கு மேல் | ஒரு தடவை மட்டும் | 6000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | <u>தொலைதொடர்பு கோபுரம் அமைக்க</u> | | | |
| | | 1. 15 மீட்டர் வரை | | ஒரு தடவை மட்டும் | 10000 |
| | | 2. 15 மீட்டர் முதல் 20 மீட்டர் வரை | | ஒரு தடவை மட்டும் | 20000 |
| | | 3. 20 மீட்டர் முதல் 30 மீட்டர் வரை | | ஒரு தடவை மட்டும் | 30000 |
| | ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதி எண். 12 | கட்டிடத்தை இடிப்பதற்கான அனுமதி கட்டணம் (Demolistion charges) | i) ஒரு சதுர மீட்டர் முதல் 20 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 1000 |
| | | | ii) 21 சதுர மீட்டர் முதல் 40 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 2000 |
| | | | iii) 41 சதுர மீட்டர் முதல் 60 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 3000 |
| | | | iv) 61 சதுர மீட்டர் முதல் 80 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 4000 |
| | | | v) 81 சதுர மீட்டர் முதல் 100 சதுர மீட்டர் வரை | ஒரு தடவை மட்டும் | 5000 |
| | | | vi) 100 சதுர மீட்டருக்கு மேல் வரும் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் கூடுதலாக சதுர மீட்டருக்கு ரூ. 50 /– வீதம் வசூல் செய்யப்படும். | | |
| 9 | நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 59 (2) ன்படி | அரசு வழிகாட்டுதல்படி நிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கட்டணம் | 1 சதுர மீட்டர் | ஒரு தடவை மட்டும் | 6 |
| 10 | | அரசு வழிகாட்டுதல்படி கட்டிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக் கட்டணம் | 1 சதுர மீட்டர் | ஒரு தடவை மட்டும் | 15 |

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) திருத்தப்பட்ட கட்டணங்களை 01.04.2019 முதல் அமல்படுத்தலாம்.
3) தினசரி நாளிதழ் மற்றும் அரசிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,50,000 /–த்தை பொதுநிதியிலிருந்து செலவழித்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) திரு. அ. சங்கர்
தனி அலுவலர் /
ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி
திருப்பூர் மாவட்டம்